செ.வெ. எண்: 691 நாள்: 27.11.2011

# செய்தி வெளியீடு

“வயிற்றுக்கு சோறிட வேண்டும் இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்” என்ற பாரதியின் குறிக்கோளின்படி, மக்கட் தொகைக்கேற்ப உணவு உற்பத்தியை பெருக்கும் நோக்கத்துடன், தமிழ்நாட்டில் இரண்டாவது பசுமைப் புரட்சிக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வித்திட்டு, இதனை நிறைவேற்றும் வகையில் இவ்வாண்டு தானிய உற்பத்தியில் 115 லட்சம் மெட்ரிக் டன் என்ற உயர் இலக்கினை தமிழக அரசு நிர்ணயித்துள்ளதோடு மட்டுமல்லாமல், விவசாயிகளின் விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைப்பதற்கும், அதன் வாயிலாக அவர்களின் தனிநபர் வருமானம் உயருவதற்கும் வழிவகை செய்துள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள பெரும்பாலான சிறு மற்றும் குறு விவசாயிகள் பயிர்க் கடனை திரும்பிச் செலுத்த வேண்டும் என்ற எண்ணத்திலும், பயிர்களை நீண்ட நாட்கள் பாதுகாப்பாக வைத்திருக்க முடியாது என்பதாலும், அறுவடை முடிந்தவுடன் கிடைத்த விலைக்கு தங்கள் விளை பொருட்களை விற்றுவிடுகின்றனர். இதன் காரணமாக, தாங்கள் விளைவித்த பயிர்களுக்கு நல்ல விலை கிடைக்காமல் விவசாயிகள் அவதிப்படுகின்றனர்.

விலை விழ்ச்சியின் போது பொருட்களை பாதுகாத்து, பின்னர் விலை ஏற்றத்தின்போது விற்பனை செய்வது விவசாயிகளின் வருவாயை பெருக்க உதவும் என்பதையும், அறுவடைக் காலங்களில் உற்பத்தி அதிகரிப்பால் விலை வீழ்ச்சியும், தேவை அதிகரிக்கும்போது, உற்பத்தி இல்லாததால் விலை ஏற்றமும் ஏற்படுவது தடுக்கப்படும் என்பதையும், கருத்தில் கொண்டு, எடைபோடும் இயந்திரங்கள், எடைமேடைகள், ஈரப்பதமானி போன்ற வசதிகளுடன் கூடிய நவீன முறையிலான சேமிப்புக் கிடங்குகளை கூடுதலாக உருவாக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இதன்படி, லாரி நிறுத்தும் வசதியுடன் கூடிய 10,000 டன் கொள்ளளவில், 25 கோடி ரூபாய் செலவில், ஈரோடு விற்பனைக்குழு, கருமண்டி செல்லிப்பாளையம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்; மதுரை விற்பனைக்குழு, மதுரை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்; தஞ்சாவூர் விற்பனைக்குழு, பூதலூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்; கடலூர் விற்பனைக் குழு, விருத்தாச்சலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்; விழுப்புரம் விற்பனைக் குழு, விக்கிரவாண்டி ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் ஆகிய இடங்களில் 5 கிடங்குகளும்; லாரி நிறுத்தும் வசதியுடன் கூடிய 5000 டன் கொள்ளவில் 20 கோடி ரூபாய் செலவில், திருவண்ணாமலை விற்பனைக் குழு, வந்தவாசி மற்றும் சேத்துப்பட்டு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், விழுப்புரம் விற்பனைக் குழு, சங்கராபுரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்; கோயம்புத்தூர் விற்பனைக் குழு, சூலூர் மற்றும் பெத்தம்பட்டி ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்; ஈரோடு விற்பனைக்குழு, சத்தியமங்கலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்; தஞ்சாவூர் விற்பனைக் குழு, ஒரத்தநாடு மற்றும் வல்லம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் ஆகிய இடங்களில் 8 கிடங்குகளும், 2000 டன் கொள்ளளவில் 37 கோடி ரூபாய் செலவில், காஞ்சிபுரம் விற்பனைக் குழு, மதுராந்தகம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்; கடலூர் விற்பனைக் குழு, கடலூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்; விழுப்புரம் விற்பனைக் குழு, கள்ளக்குறிச்சி, அவலூர்பேட்டை, செஞ்சி, தியாகதுராகம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், சேலம் விற்பனைக் குழு, நாமகிரிப்பேட்டை, மெய்சேரி, சேலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், கோயம்புத்தூர் விற்பனைக் குழு, கிணத்துக்கடவு, பொள்ளாச்சி, சேவூர், அவினாசி ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், ஈரோடு விற்பனைக் குழு, அந்தியூர், அவல்பூந்துறை, கொடுமுடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், திருச்சி விற்பனைக் குழு, ஜயங்கொண்டம், அரியலூர், துறையூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்; தஞ்சாவூர் விற்பனைக் குழு,

கும்பகோணம், தஞ்சாவூர், பாபநாசம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், புதுக்கோட்டை விற்பனைக்குழு, ஆலங்குடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்; மதுரை விற்பனைக் குழு, திருமங்கலம், உசிலம்பட்டி ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்; ராமநாதபுரம் விற்பனைக் குழு, விருதுநகர், தேவகோட்டை, முதுகளத்தூர், R.S.மங்களம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்; திருநெல்வேலி விற்பனைக் குழு, திருநெல்வேலி, பாவூர்சத்திரம், கடையநல்லூர், தூத்துக்குடி, வள்ளியூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்; கன்னியாகுமரி விற்பனைக் குழு, வடசேரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், தேனி விற்பனைக் குழு, கம்பம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்; திண்டுக்கல் விற்பனைக் குழு, நத்தம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் ஆகிய இடங்களில் 37 கிடங்குகளும், ஆக மொத்தம் 82 கோடி ரூபாய் செலவில், நவீன வசதிகளுடன் கூடிய 50 கிடங்குகள் புதியதாக அமைக்கப்பட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டார்கள். இதன் மூலம் விவசாயிகள் தாங்கள் பயிரிடும் பொருட்களை நல்ல முறையில் பாதுகாத்து, அவற்றை நல்ல விலைக்கு விற்பனை செய்ய வழி வகை ஏற்படுவதோடு, விவசாயிகளின் பொருளாதார நிலையில் நல்ல மாற்றம் ஏற்பட்டு அவர்களது வாழ்வாதாரம் சிறப்பாக அமையவும், அவர்கள் கடன் சுமையிலிருந்து முற்றிலுமாக விடுபடவும் ஏதுவாகும்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை.
நாள்: 27.11.2011